# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No. 58/2013**

Deposition of witness for : PW7

Name : குமார்

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 04th day of March 2025.

**04-03-2025**

**A1 to A4, A6 to A10 and A12, A13 present. A14 produced. A5, A11 charges abated.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தீவட்டிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய தகப்பனார் கூட்டுறவு சொசைட்டி அருகில், தீவட்டிபட்டியில் சைக்கிள் ஸ்டேண்ட் வைத்திருந்தார். தற்போது நான் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னிடம் ஒரு கையெழுத்து போடுமாறு கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன்.

எதற்காக கையெழுத்து கேட்டார்கள் என்று நான் கேட்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

22.01.2011ம் தேதி இரவு 9.30 மணியளவில் நான் சைக்கிள் ஸ்டேண்டில் இருந்தேன் என்றும், அதன் பிறகு எனது பார்ட்னர் ரசாக் வந்தவுடன் அவரை பார்த்துக்கொள்ள சொல்லி நான் சென்றுவிட்டேன் என்றும், அன்று இரவு 11.00 மணியளவில் யாரோ ஒரு நபர் பஜாஜ் CD 100 TN 30 L 8105 என்ற இருசக்கர வாகனத்தை ஸ்டேண்டில் நிறுத்திவிட்டு சென்றார் என்றும், அதன் பிறகு அந்த வாகனத்தை ஒரு வாரகாலமாக யாரும் எடுக்கவில்லை என்றும், 02.02.2011ம் தேதி காலை 10.30 மணியளவில் அஸ்தம்பட்டி போலிசார் கரிகாலன் என்பவருடன் சைக்கிள் ஸ்டேண்டிற்கு வந்தார்கள் என்றும், அப்போது கரிகாலன் மேற்படி இருசக்கர வாகனத்தை போலிசாரிடம் அடையாளம் காண்பித்து ஆஜர்படுத்தினார் என்றும், அதை சாட்சிகள் முன்னிலையில் போலிசார் கைப்பற்றினார் என்றும், அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார் என்றும், போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளின் வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்கள்.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.